வெளியீடு எண் 266.

106

# திருவைகன்மாடக்கோயில் திருப்பதிகம்



சம்பந்தர்.

தருமபுர ஆதீனம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 APR 1952
MADRAS

Q23:417x1
N52
78316

வெளியீடு எண், 266.

உ

குருபாதம்

# திருவைகன்மாடக்கோயில் திருப்பதிகம்

இந்நூல்

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
இருபத்தைந்தாவது மகாசந்நிதானம்
**ஸ்ரீ-ல-ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த**
**பரமாசாரிய சுவாமிகள்**
திருவுள்ளத்தின்படி வெளியிடப்பெற்றது.

**1952.**

உ

குருபாதம்

# முன்னுரை

78316

தருமபுர ஆதீனம் ஸ்ரீ-ல-ஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் மாத ஜன்மநக்ஷத்திர நாட்களில் திருப்பதிகம் பெற்ற சிவஸ்தலங்களில் ஆதீனச் சார்பில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகத்தையும் அச்சிட்டு வழங்கிவருதல் போல, இம்மாதத்திலும் 9—4—52 அன்று திருவைகல் மாடக்கோயில் ஆலயத்தில் அபிஷேக ஆராதனைகள் செய்வித்துத் தலப்பதிகம் அடங்கிய இவ் வெளியீடும் அன்பர்கட்கு வழங்கப்பெறுகின்றது. அன்பர்கள் யாவரும் பாராயணஞ் செய்து, ஸ்ரீ வைகல்நாத சுவாமியின் திருவருளால் எல்லா நலன்களும் பெற்று உய்வார்களாக.

உ

குருபாதம்.

# தலச்சிறப்பு

இத்தலம் காவிரித் தென்பால் முப்பத்து மூன்றாவது தலமாக எண்ணப்பெறுவது, திருஞானசம்பந்தர் திருப்பதிகம் பெற்றது, 'வைகல்' 'வைகல் மணாளன்' 'வைகன் மேன்மாடத்துள்ளார்' என அப்பரடிகளாலும் 'வைகல்நீடு மாடக்கோயில் மருந்தை' எனச் சேக்கிழார் அடிகளாலும், 'முல்லைமலர் வம்புலவும் வைகல் வரநகர் மாடக்கோயில்' 'கொம்பிலிளம்கோதை வைகற் கோமானே' என உமாபதி சிவாசாரிய சுவாமிகளாலும் போற்றப்

பெற்ற சிறப்பினது. கோச்செங்கட் சோழ நாயனாரால் அமைக்கப் பெற்ற சிவாலயம் அறுபத்து நான்கனுள் இதுவும் ஒன்று. இங்கு மும்மூர்த்தி வடிவினனாய் இறைவன் என்றும் நீங்காது உறைந்து அருளுதலின் வடமொழியில் நித்திய வாசபுரம் எனவும், தமிழில் வைகல் எனவும். இலக்குமி சண்பகவனமாக்கி இறைவனைப் பூசித்தமையின் சண்பகாபுரம் எனவும். திருநாமங்களுடன் திகழ்வது.

**வழிபட்டு அருள் பெற்றோர்கள்:** திருமகள் வைகுந்தத்து அந்தப்புரத்திலே திருமால் சமேதராய் மகிழ்வுடன் வீற்றிருந்தனர். அவ்வமையம் பூமி தேவியார், ஆங்குச்சென்று திருமாலைப் பணிந்து நின்றனர். புன் முறுவல் பூத்த ஸ்ரீ வைகுந்தநாதன் திருமுன் நோக்கி இப்புவியின் நாயக, பார்வதியாரோடு பரமனும்,

நாமகளோடு நான்முகனும், இலக்குமியாரோடு நீவிரும் கயிலையிலும் சத்திய உலகிலும், பாற்கடலிலும் மகிழ்ந்து வீற்றிருக்கிறீர்கள்; நீரோ புவியின் பதி அடியேன் இப் பூமியின்தேவி! ஆதலின் அடியேற்கு உரிய நாயகர் நீரே ஆவீர்; ஏற்றருள வேண்டும்' என்று இறைஞ்சினர். அது கண்ட இலக்குமியம்மையார் சினமிக்குடையராகி இங்கு வந்தடைந்து பெருமானைப் பணிந்து எமது ஒரு பக்கலில் மற்றொருத்தியிலாத ஏகபத்தினி விரதராக திருமாலினை எமக்கு அருள்புரிதல் வேண்டும் என்று கொண்ட உள்ளத்தினராய் ஓர்பால் அமைந்து கடுந்தவம் புரிந்தனள்.

**திருமால்:** இவர் தம்மைப் பிரிந்து நீங்கிய திரு மகளாரைத் தேடியவராகித் தவக்கோலம் பூண்டு ஏக பத்தினி விரதராகத் தம்மையடையத் தவம் புரிந்தருளும்

திருமகளாரை நாரதரால் அறிந்து, இங்கு வந்து இத்தலத்து இறையருள்வழி அமைந்து பண்டுபோல் அவ் இலக்குமியாரைப் பெறுவான் கருதி வழிபாடு புரிந்து காலம் நோக்கி இருந்தனர்.

**பிரமன் :** திருமால் பண்டுபோல் திருமகளாரைப் பெற்றிடவும், பூதேவியார்பால் எழுந்த இலக்குமி தேவியாரது சினம் தணிந்திடவும், பூதேவி ஸ்ரீதேவி நாயகனுகவே திருமாலை அருளுதல் வேண்டும் என்று இங்கு இறைவனைப் பணிந்து வழிபாடு புரிந்திருந்தனர், இம்மூவர்களது தவத்திற்கும் பூசனைக்கும் இரங்கிய இத்தலத்திறைவர், ஸ்ரீதேவியாரை நீங்காத திருமார்பினராய திருமால் பூதேவியாரும் மகிழ்ந்திடும் மணாளராகிட, அருள் தரப் பெற்றனர்.

**ஈசல் :** இங்கு இருளடர்ந்த காடுகளில் திரிந்து தனது பெண்யானையினைத் தேடியலைந்து வந்த மதமிக் கெழுந்த யானை ஒன்று ஈண்டு செறிந்தடர்ந்திருந்த ஓர் புற்றினில் உராய்ந்தது. அதனால் பழுதடைந்த புற்றினுள், இருந்து எழுந்த ஈசல்கள் கோபம் மிக்குடையனவாகி யானையின் உடலைப்பற்றி அரித்துவிட்டன. மயக்குற்றுச் சோர்ந்து வீழ்ந்தது யானை. அக்கணம் ஓடித் தேடிவந்து கண்ட பெண்யானை அலறிக் கதறியது. பேரோசைகேட்ட ஈசல்கள் நீங்கின, எனக்குரிய நாயகன் உடலை அரித்து விட்டீர்களே இஃது நீதியாகுமா எனக்கேட்ட பெண் யானைக்கு, எங்கள் புற்றினை அழித்தல் முறையோ என்றன ஈசல் கூட்டங்கள். நீங்கள் எங்கள் பகையாளி யாகிய சிங்கம் வருகிறது என்றல்லவா புற்றினுள்ளிருந்து சப்தம் செய்து கொண்டிருக்கின்றீர்கள் இஃது தருமம்

ஆகுமா என்றது பிடியானை. ஈசல்கள் உடனே இங்கு சார்ந்து இறைவனைப் பூசித்தன, ஈசனைப்பூசித்ததால் ஈசல் என்ற நாமமும் பெற்றன. யானையும் இங்கு இறைவனைப் பூசித்தது. இதுபற்றி யானைக்கும் ஈசல்கட்கும் அன்று முதல் பகைமை உண்டாயது என்பது வரலாறு.

**ஆலயம் :** நகரின் வடதிசையில் உள்ளது. அழகிய திருமதில்களோடு கிழக்கு நோக்கிய திருவாயில்களுடன் விளங்குகிறது. இறைவன் பிரமபுரீஸ்வரர், இறைவி பெரியநாயகியம்மையார் தெற்கு நோக்கிக் காட்சியளிக்கின்றனர். இங்கு விநாயகர் முதலிய பரிவாரத் திருவடிவங்களோடு நான்முகனது அழகிய உற்சவத் திருவடிவம் ஒன்றும் உள்ளது. பிரமன் பூசித்து அருள் பெற்றது இத்தலம்.

**வளநகர் ஆலயம் :** இறைவன்: விசுவநாதர். இறைவி: விசாலாக்ஷி. இஃது திருமகளார் தவங்கிடந்து வழிபட்டது. தெற்கில் உள்ளது.

**மாடக்கோயில் ஆலயம்:** மேற்றிசையில் உள்ளது. மாடக்கோயில் என்பது. யானை யேருவண்ணம் பூமி மட்டத்திலிருந்து • ஒருயானையின் உயரத்திற்கு மேற்பட்ட அவ் அளவில் தளத்தை உயர்த்தி, மகாமண்டபத்துடன் சிலந்தி ஈசல் நுழையாதவண்ணம் ஒரு சிறு துவாரங்கள்கூட இல்லாதபடி ஆக்கிய கருப்பக்கிருகமும், அமைய மாடம் போன்று பக்கங்களில் அமைக்கப்பெற்ற திருவாயில்களுடன் திகழ்வது. இதனை யானையேருக் கோயில், பெருங்கோயில் எனவும் வழங்குவது மரபு. இது அழகிய திருமதில்களோடு கிழக்கு நோக்கிய திருவாயி

லுடன் விளங்குகிறது. இறைவன் சண்பகாரண்யேஸ்வரர். இறைவி கொம்பிலிளங்கோதையம்மையார். (திருமாலுக்கு மணக்கோலம் காட்டியருளியமை பற்றி) வலப்பால் திகழ்கின்றனர். (இவரது ஆலயம் இறைவனுக்குத் தென்புறம் கிழக்குநோக்கியுள்ளது.) பிராகாரத்துள் விநாயகர் முருகன் முதலிய மூர்த்திகளோடு சீதேவி, பூதேவி சமேதராய்த் திருமாலும் விளங்குகின்றனர். இங்குள்ள திருமாலும் முருகனும் விசேட மூர்த்தியாவர். பூதேவியாரோடு திருமகளாரைப் பெறுவதற்குத் திருமால் பூசித்து வழிபட்ட கோயில், இராஜ்யலெக்ஷிமி பார்சுவாலயம் என்பதும் இஃதே. இதனுள் திருத்தொண்டர் புராண வரலாற்று முறையானும், தேவாரத் திருப்பதிகங்கள் அருளுமுறையானும் வைகலுட் போற்றப்பெறும் இத் திருப்பதிகத்திற்குரிய சிவாலயம் வைகலின் மேற்றிசை

மாடக்கோயில் ஆலயமாகிய இதுவேயாகும்.

**வழிபாடு:** நாடோறும் காலங்கள் ஐந்தும் பங்குனி உத்திரவிழா, சிவராத்திரி பூசனை முதலியனவும் நன்கு நடைபெறுகின்றன. தலவிருக்ஷம்: சண்பகம்.

**தீர்த்தங்கள்:** இங்கு பூசித்து வழிபட்டு அருள்பெற்ற நான்முகனது உவகையின் • எழுந்து நான்கு வேதங்களும் நான்முகன் உவகை யெய்திட உளங்கொண்டருளிய இறை யருள்வழி அமைந்து வைகல் பிரமபுரீஸ்வரர் ஆலயத் திருமுன் இருக்குவேதமும், தென்பால் விசுவநாதர் ஆலயத்தின் தெற்கில் யசுர்வேதமும், குடதிசையில் சண்ப காரண்யேஸ்வரர் ஆலயத்தின் தென்பால் சாமவேதமும்,

78316

வடபால் அதர்வணவேதமும் தீர்த்தங்களாகித் திகழ் கின்றன.

**பயன்:** இதனில் மூழ்கி இங்கு இறைவனை வழி பட்டோர் மும்மூர்த்திகளையும் வழிபட்டவர்களாகி எல்லாப் பாவங்களின் நீங்கியவராய் நாராயணனும் புண்ணியத் திருவடிவம் பெற்று உலகியற்போகங்கள் அனைத்தும் உற்றிட மகிழ்ந்து, சுவர்க்க உலகங்களிற் சென்று இன்புற்று, பின்னை சிவன் உலகினிற் சென்று சிவகணராகி மகிழ்வர் என்பது வழிவழி வரலாறு.

**இடம்:** இத்தலம் ஆடுதுறை புகைவண்டி நிலையத்தி லிருந்து தென்மேற்கே (புதூர் பஸ் லயனில் புளியடியி லிருந்து அரைமைலில்) சுமார் 5-மைலில் உள்ளது. கற்சாலை. சம்பந்தர் பதிகம்பெற்றது.

# திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகம்

## பண் - காந்தாரபஞ்சமம்

இராகம்: **கேதாரகௌளம்**] [தாளம்: **ஆதி**

திருச்சிற்றம்பலம்

துளமதி யுடைமறி தோன்று கையினர்
இளமதி யணிசடை யெந்தை யாரிடம்
உளமதி யுடையவர் வைக லோங்கிய
வளமதி தடவிய மாடக் கோயிலே. 1

துளங்குகின்ற அறிவுமிக்க மான் விளங்கும் திருக்கரத்தினர், இளம் பிறையினை யணிந்த சடாமுடியினர், எந்தையார் - எம்பெருமானாரது உறைவிடம், அறிவோடு நிறைந்த பெருமானை எண்ணிய நிறைந்த உள்ள முடைய

பெரியோர்கள் வாழ்கின்ற வைகன்மாநகரிடை ஓங்கி உயர்ந்ததாய முழுமதிதவழ்ந்து அழகு செய்கின்ற மாடக் கோயில் இதுவாகும்.

மெய்யக மிளிரும்வெண் ணூலர் வேதியர்
மையகண் மலைமக ளோடும் வைகிடம்
வையக மகிழ்தர வைகன் மேற்றிசைச்
செய்யகண் வளவன்முன் செய்த கோயிலே. 2

திருமேனியில் விளங்குகின்ற வெள்ளிய பூணூல் நூலினன். அந்தணன். எந்தை. மையணிந்த கண்ணுடை மலைமங்கை மணாளனாய் உறைந்துவாழும் இடம். உலகெலாம் மகிழ்வெய்த வைகன்மாநகரிடை மேல்திசையின் உள்ள சிவந்த கண்ணுடைச் சோழன் ஆக்கிய மாடக் கோயில் இதுவே.

கணியணி மலர்கொடு காலை மாலையும்
பணியணி பவர்க்கருள் செய்த பான்மையர்
துணியணி யுமையொடு தாமுந் தங்கிடம்
மணியணி கிளர்வைகன் மாடக் கோயிலே. 3

ஆராய்ந்து எடுக்கப்பெற்ற செழித்த அழகிய மலர்கள் பலகொண்டு காலை மாலை இண்டைமாலையொடு பணி மாலைகளும் ஆக்கி அணிந்துபோற்றி வழிபடும் தொண்டர்கட்கு அருளைப்புரிந்தருளும் தன்மையரராய், எந்தையார் உமையம்மையாரோடு தானும் பொருந்திவாழும் இடம்- அழகோடு ஒளிகிளர்ந்து விளங்குகின்ற மணிகள் திகழ்கின்ற வளம்செறிந்த வைகல்மா நகரிடையதாய மாடக்கோயிலிதுவே ஆகும்,

கொம்பியல் கோதைமுன் னஞ்சக் குஞ்சரத்
தும்பிய துரிசெய்த துங்கர் தங்கிடம்
வம்பியல் சோலைசூழ் வைகன் மேற்றிசைச்
செம்பியன் கோச்செங்க ணான்செய் கோயிலே. 4

கொம்பியல்கோதை உமையம்மை வெருவிட முன் மதர்த்தெழுந்த குஞ்சரத்தும்பியினை (யானையினை) உரித்தருளிய தூயோன், எந்தை உறையும் இடம். மணம்கமழ் மலர்நிறைந்த தன்மைவாய்ந்த சோலைகள் சூழ்ந்த அழகு மிக்க இவ்வைகல்மா நகரிடை மேற்றிசையின் கோச்செங்கட்சோழர் ஆக்கிய மாடக்கோயிலாகிய இதுவே.

விடமடை மிடற்றினர் வேத நாவினர்
மடமொழி மலைமக ளோடும் வைகிடம்

மடவன நடைபயில் வைகல் மாநகர்க்
குடதிசை நிலவிய மாடக் கோயிலே. 5

விடம் பொருந்திய கண்டத்தினர். வேதங்களை அருளிடும் நாவினர். எந்தை, மழலைமொழி உமையாள் மலைமகள் பாகராய் மன்னி உறையும் இடம். அழகுமிக்க இள அன்னங்கள் நடைபயிலுகின்ற நீர்வளம் செறிந்த வளமிக்க இவ்வைகல் மாநகரிடை மேற்றிசையின் விளங்குகின்ற மாடக்கோயில் இதுவேயாகும்.

நிறைபுனல் பிறையொடு நிலவு நீள்சடை
இறையவ ருறைவிட மிலங்கு மூவெரி
மறையொடு வளர்வுசெய் வாணர் வைகலில்
திறையுடை நிறைசெல்வன் செய்த கோயிலே. 6

நிறைந்த கங்கைநீரொடு சந்திரன் பொருந்திய சடையுடை இறைவர் உறைந்து வாழும் இடம் நாடோறும் காலை உச்சி அந்திக்காலங்களில் உரிய அக்னிகாரியங்களை வேதங்கள் கொண்டு போற்றி வேதவிதி நீதிவழிநின்று முறையிற்புரிந்திடுகின்ற அந்தணாளர்கள் வாழ்கின்ற இவ் வைகல் மாநகரிடை அரசர்பலரால் கப்பம்பெறும் நிறை செல்வ முடிமன்னர் (பேரரசர்) கோச்செங்கட்சோழர் ஆக்கிய மாடக்கோயில் இதுவாகும்.

எரிசரம் வரிசிலை வளைய வேவிமுன்
திரிபுர மெரிசெய்த செல்வர் சேர்விடம்
வரிவளை யவர்பயில் வைகன் மேற்றிசை
வருமுகி லணவிய மாடக் கோயிலே. 7

வளைந்திட ஆக்கிய மலைவில்லினாலே, அக்னிபொருந்திய அம்பினைத்தொடுத்து விடுத்து அசுரர்களது மூன்றுபுரங்களையும் எரித்தருளியசெல்வராகிய எந்தை உறையுமிடம் வளையல்களணிந்த மாதர்கள் பயிலுகின்ற வைகன் மாநகரிடை மேகங்கள் வந்து பொருந்தித் தவழ்கின்ற மேற்றிசையின் உயர்ந்து ஓங்கி அமைந்த மாடக் கோயில் இதுவேயாம்.

மலையன விருபது தோளி னான்வலி
தொலைவுசெய் தருள்செய்த சோதி யாரிடம்
மலர்மலி பொழிலணி வைகல் வாழ்வர்கள்
வலம்வரு மலையன மாடக் கோயிலே. 8

மலையொத்த இருபது தோளுடைய இராவணனது வலிமை கெடச்செய்து, பின் அவனுக்கு அருளும்செய்த

சோதியாகிய எந்தையார் உறைவிடம், மலர்கள் நிறைந்த பொழிலாற்சூழ்ந்த அழகுமிக்க இவ் வைகல்மாநகரிடை, வாழ்வார்களாகிய அன்பர்கள் வலம்வந்து போற்றுகின்ற மலையினையொத்து விளங்குகின்ற மாடக்கோயில் இதுவாகும்.

மாலவன் மலரவ னேடி மால்கொள
மாலெரி யாகிய வரதர் வைகிடம்
மாலைகொ டணிமறை வாணர் வைகலில்
மாலன மணியணி மாடக் கோயிலே. 9

மாலும் பிரமனும் மயக்கம் கொண்டிடப் பெரிய அழல் வடிவாகி நீண்டு நின்றருளிய அநுக்கிரக அருள்வடிவினராகிய எம்பெருமான் பொருந்தி உறையுமிடம். இவ்வைகல் மாநகரிடை அழகிய மலர்மாலைகளோடு மணிமாலைகளும்

கொண்டுபோற்றி, திருமாலையென ஒத்த அந்தணாளர்கள் வழிபாடுபுரிகின்ற சிறப்பமைந்த மாடக்கோயில் இதுவே யாகும்.

கடுவுடை வாயினர் கஞ்சி வாயினர்
பிடகுரை பேணிலார் பேணு கோயிலாம்
மடமுடை யவர்பயில் வைகன் மாநகர்
வடமலை யனையநன் மாடக் கோயிலே.

விடம்போலும் செயல்மைந்த சொற்கள் வெளிவரவும் செலுத்தப்பெறும் கஞ்சி உட்செல்லவும் ஆகிய வாயினை யுடையாரும் பிடகநூலினரும் ஆகிய சமணர்களது சொற்களைப் பேணாத மெய்த்தொண்டர்கள் பேணிப் போற்றுகின்ற கோயிலாகும். இறைவனையன்றி ஏனையவற்றை அறியாததாகிய அறியாமை மிக்க அடியவர்கள்

பயில்கின்ற இவ்வைகல்மாநகரிடை, வடகயிலை மலையினை ஒத்தொளிரும் நல்லதொரு மாடக்கோயில் இஃது,

மைந்தன திடம்வைகன் மாடக் கோயிலைச்
சந்தமர் பொழிலணி சண்பை ஞானசம்
பந்தன தமிழ்கெழு பாடல் பத்திவை
சிந்தைசெய் பவர்சிவ லோகஞ் சேர்வரே. 11

இவ்வைகன் மாநகரிடையுள்ள மாடக்கோயிலை, அழகு பொருந்திய பொழிலாற் சூழ்ந்த சண்பையிலேவந்த ஞானசம்பந்தன் அருளிய இசை பொருந்திய தமிழாற் கெழுமிய இப்பாடல்கள் பத்தினையும் சிந்தையிலே கொண்டு சிந்தனை செய்யவல்ல அன்பர்கள் பெறுதற்கரிய சிவனுரது மேலாம் உலகினிற் பொருந்தி வாழ்வர்.

# திருவாசகம்.

திருச்சிற்றம்பலம்.

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனை
பேயேனது உள்ளப்பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளும்
தாயன ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

திருச்சிற்றம்பலம்.

# திருவிசைப்பா.

திருச்சிற்றம்பலம்.

அற்புதத் தெய்வம் இதனின் மற்றுண்டோ
அன்பொடு தன்னை அஞ்செழுத்தின்
சொற்பதத்துள் வைத்து உள்ளம் அள்ளூறும்
தொண்டருக்கு எண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன் மாளிகையும்
பவளவாயவர் பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுது மாம் கங்கை
கொண்ட சோளேச் சரத்தானே.

திருச்சிற்றம்பலம்.

78316

# திருப்பல்லாண்டு.

திருச்சிற்றம்பலம்,

புரந்தரன் மாலயன் பூசலிட்டு ஓலமிட்டு
இன்னும் புகல் அரிதாய்
இரந்திரந்து அழைப்ப என்னுயிர் ஆண்ட
கோவினுக்கு என்செயவல்லம் என்றும்
கரந்தும் கரவாத கற்பகனாகிக்
கரையில் கருணைக் கடல்
பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கர்க்கே
பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்.

# பெரியபுராணம்.

திருச்சிற்றம்பலம்,

கொன்றைவார் சடைமுடியரை கோழம்பத்து இறைஞ்சி
என்றும் நீடிய இன்னிசைப் பதிகமுன்னியம்பி
மன்றுளார் மகிழ்வைகல் மாடக்கோயின் மருங்கு
சென்று சார்ந்தனர் திருவளர் சிரபுரச்செல்வர்.

வைகல்நீடு மாடக்கோயில் மன்னிய மருந்தைக்
கைகள் அஞ்சலி கொண்டு தாழ்ந்தெழுந்துகண் அருவி
செய்ய இன்னிசைச் செந்தமிழ்மாலைகள் மொழிந்து
நையும் உள்ளத்தராய் திருநல்லத்தின் நண்ணி.

திருச்சிற்றம்பலம்.

ஞானசம்பந்தம் பிரஸ், தருமபுரம். C. 200.